www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

37

1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் கூட்டாளிகளான சிங் இடதுசாரிக் கட்சிகளும்; ொழும்பில் நடத்திய ஆர்ப் ாட்ட ஊர்வலமும்; வேலை த்தப் போராட்டமும்; முழுக்க முழுக்க தமிழர்களுக்கு ரான இனவாத அடிப்படையைக் கொண்டதாக இருந்தன.

இது இனம், மொழி, பிர தசம், நாடு எல்லாவற்றையும் கடந்து 'சர்வதேசியம்' பேசிய சிங்கள இடது சாரிகளின் மார்க் ிச - லெனினிச / ரொக்சிச சித் தங்கள் எல்லாமே சாதாரண 'மசால வடை'க்குள் அடக்கம் ன்பதை நிரூபித்தது.

ஒரு அம்சம், பௌத்த சிங்கள தேசிய வாதம் என்பது தனி ஒரு கட்சி சார்ந்ததாக இருக்க வில்லை என்பதாகும். கடவுள் எங்கும் நிறைந்தவர். சர்வ வியா பகமானவர் என்று மதவாதி கள் சொல்வதுபோல இந்த பௌத்த சிங்கள தேசியமானது. சிறீலங்காவில் எங்கும் நிறைந்த ஒன்றாக இருந்து வருகிறது.

'பௌத்தமும் சிங்களமும் பிரிக்கப்பட முடியாதவை - பௌத்த மதத்தை காப்பாற்றுவ தற்காகவே சிங்கள இனம் படைக்கப்பட்டது. 50-வது நூற் றூண்டு வரை பௌத்த மதத்தை காப்பாற்றும் பொறுப்பை கௌதம புத்தர் சிங்கள இனத் துக்குக் கொடுத்திருக்கின்றார். ஆரிய வம்சத்தைச் சேர்ந்த

அதற்குக் காரணம், பௌத்த மதத்தை தனியாகப் பிரித்து விட்டு - சிங்கள மொழியின் - சிங்கள இனத்தின் தத்துவம் பற்றி பேச முடியாதிருப்பதே யாகும்.

எனவே, சிங்கள இனத்தின் தலைவராக ஒருவர் வரவேண் டுமானால் - அதுவும் சிங்கள மக்களிடம் வாக்குச் சீட்டு அர சியல் நடத்த வேண்டுமானால் ஒன்றில் அவர் முழுக்க முழுக்க பௌத்த சிங்கள பேரினவாதி யாக இருக்க வேண்டும். அல் லது தான் அவ்வாறு இருப்பவ ராக நடிக்க வேண்டும்.

எனவே தான் பண்டா - செல்வா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையில்

தத்தை கிழித்தெறி' என்ற தலைப்பின் கீழ்.

'சிங்களவர்களின் பிறப்புரி மைக்குத் துரோகமிழைக்கும் டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்

**பிறமொழிகளைக் கற்று அறிவுத் தேர்ச்சியடைந்தாலும், இன, மொழி, மத பேதம் கடந்து சர்வதேச பாட்டாளிவர்க்க ஒற்றுமையை வலியுறுத்தும், மார்க்சிச, லெனினிச, ரொக்சிச சித்தாங்களை படித்தாலும், சிறு வயதில் அவர்களது மூளையில் பதிவு செய்து வைக்கப்பட்ட பௌத்த புனித மரபுக் கருத்துக்களின் மேலாதிக்கத்தை அவர்களால் உடைக்க முடிவதில்லை.**

துக்கெதிராக பொதுசன எதிர்ப்பை திரட்டும் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நாட்டுப்பற்றுள்ள அமைப்புகள் விரைவாகச் செய்து வருகின் றன' என்று எழுதியது.

1965 டிசம்பர் 5-ம் திகதி

8-ம் திகதி விகாரமாதேவி பூங் காவில் டட்லி - செல்வா ஒப்பந்த எதிர்ப்பு, மற்றும் தமி ழர் எதிர்ப்புச் சடங்குகள் நடை பெற்று முடிந்த பின் அங்கிருந் தவர்கள் மசால வடை அப் பிட்ட எப்பா! (மசால வடை எங்களுக்கு வேண்டாம்) பற தெமிழ அப்பிட்ட எப்பா!! (பறைத் தமிழர்கள் எங்களுக்கு வேண்டாம்) என்று கோசம் எழுப்பியவாறு பாராளுமன்

# மசால வடைக்குள் அடங்கிய மார்க்சிசம்



டட்லி - செல்வா ஒப்பந்தம் - தமிழர்களிடமிருந்து ஆங்கி லேய காலனிய ஆட்சியாளர்க ளால் வலுக்கட்டாயமான முறை யில் பறிக்கப்பட்டு 'சிலோன்' என்ற ஒற்றையாட்சிச் சிறைக் குள் அடைக்கப்பட்ட தமிழினத் தின் சுயாட்சி உரிமையையோ, அதனடிப்படையில் வரக்கூடிய ஏனைய அடிப்படை உரிமைக ளையோ வழங்குவதற்கு தயா ரானதாக இருக்கவில்லை.

பௌத்த சிங்களவர்களுக்கு திரா விடர்களான தமிழர்கள் எப் போதுமே எதிரிகள்' என்கின்ற புனித மரபுச் கருத்துக்கள் பௌத்த சிங்களவர்களுக்கு அவர்களது தாய்ப்பாலுடன் சேர்த்தே ஊட்டப்படுகின்றது.

பிற்காலத்தில் அவர்கள் வளர் ந்து பிறமொழிகளைக் கற்று அறிவுத் தேர்ச்சியடைந்தாலும், இன, மொழி, மத பேதங்கடந்து சர்வதேச பாட்டாளிவர்க்க ஒற் றுமையை வலியுறுத்தும், மார்க் சிச, லெனினிச, ரொக்சிச சித் தாங்களை படித்தாலும், சிறு வயதில் அவர்களது மூளையில் பதிவு செய்து வைக்கப்பட்ட பௌத்த புனித மரபுக் கருத் துக்களின் மேலாதிக்கத்தை அவர்களால் உடைக்க முடிவ தில்லை.

சிறீலங்காவில் இருக்கக்

**கடவுள் எங்கும் நிறைந்தவர். சர்வ வியாபகமானவர் என்று மதவாதிகள் சொல்வதுபோல இந்த பௌத்த சிங்கள தேசியமானது. சிறீலங்காவில் எங்கும் நிறைந்த ஒன்றாக இருந்து வருகிறது.**

றாக தமிழினத்தின் அடி மச் சிறையான 'சிலோன்' ன்ற ஒற்றையாட்சி அமைப் குள்ளேயே - வடக்கு - கிழக் ல் மாவட்ட சபைகள் அமைத் தல், அமுலாக்கல் முதலான சில சலுகைகளையே அது வழங்க முன்வந்தது.

ஆனால், இந்தச் சிறு சலு கைகளைக் கூட தமிழர்கள் பெற்று விடக்கூடாது என்பதில் பௌத்த சிங்கள பேரினவாதி கள் உறுதியாக இருந்தனர். இங்கே முக்கியமாக இந்த இடத் லே கவனிக்கப்பட வேண்டிய

கூடிய தேரவாத பௌத்தம் என் பது, ஒரு அரசு எவ்வாறு தன் னுடைய இறைமைக்குட்பட்ட குடிமக்கள் மீது அவர்களது பிறப்பிலிருந்து இறப்புவரை ஆளுமை செலுத்துகின்றதோ, அவ்வாறே ஒவ்வொரு சிங்கள வர்களையும் அவர்களது பிறப் பிலிருந்து இறப்புவரை கட்டுப் படுத்தும் ஆளுமை செய்யும் கரு வியாக அது இருக்கிறது. கிறிஸ் தவ மதத்துக்கு மதம் மாறிய சிங்களவர்கள் கூட, இந்தக் கட் டுப்படுத்தலிலிருந்தும் ஆளுமை யிலிருந்தும் தப்ப முடிவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அதை எதிர்த்தது. டட்லி - செல்வா ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்ட போது சிறீலங்கா சுதந்தி ரக் கட்சியும், அதன் கூட்டாளி களான இடது சாரிக் கட்சிக ளும் அதை எதிர்த்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி என்ற இரண்டு சிங்கள பெரும்பான்மை கட்சிகள், தமிழர்களுக்கு உரிமை வழங்குவதை எதிர்த்ததற்கும் - கம்யூனிஸ்ட் கட்சி, சமஜமாஜக் கட்சி முதலான இடது சாரிக் கட்சிகள் எதிர்த்ததற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இந்த இரண்டு கட்சிகளின் தலைவர் களும் தொழிலாளர் ஒற்றுமை பற்றி அதிகம் பேசியவர்கள். பாராளுமன்றத்தில் மந்திரிப் பத விகளைப் பெறுவதற்கு முன்பு- தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்று வாதாடியவர்கள். தமிழர் சிங்க ளவர் ஒற்றுமை பற்றி அதிகம் பேசியவர்கள். ஆனால், திருமதி சிறீமாவோ பண்டார நாயக்கா வின் காலடியில் வீழ்ந்த பின்பு பௌத்த சிங்கள தேசிய வாதம் அரர்களது ' 'மூலதனமானது', 'மசால வடை' கோசம் அவர்க ளது அரசியல் சித்தாந்தமானது.

டட்லி சேனநாயக்கா, தமி ழரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்தவுடனேயே லங்கா சமஜமாஜக் கட்சி தனது பத்திரிகையான 'ஜனதின' மூல மாக தமிழர்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை விதைக்கத் தொடங்கிவிட்டது.

'இரத்மலானையை தமிழ் நகராக்க இரகசிய முயற்சி, சமஷ்டிவாதிகளின் வெற்றி சிங் களவருக்கு முடிவு, சிங்கள பௌத்தர்களே! எழுக; வடக்கி லுள்ள சிங்களவர்களுக்கு ஆப- த்து!' என்றெல்லாம் இனவாதக் கருத்துக்களுடன் கூடிய ஆசிரி யத் தலையங்கங்களை எழுதிய அப்பத்திரிகை, டட்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து 'ஒப்பந்

அது 'முச்சிங்களவர் எழுச்சியுற் றனர்' என்ற தலைப்பில் எழு திய ஆசிரியர் தலையங்கத்தில் நாட்டையும் சிங்களவர்களையும் காப்பதற்காக விக்டோரியா பூங்கா (தற்போது விகாரமா தேவி பூங்கா) விலுள்ள விகார மாதேவியின் சிலை அருகேயி ருந்து பஞ்ச மகாபலவேகய புனி தத் தலங்களை நோக்கி மூன்று ஊர்வலங்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தென்றும், இதில் நாட்டுப் பற் றுள்ள சிங்கள பௌத்தர்கள் அனைவரும் பங்குபெற வேண் டும் என்றும் அறைகூவல் விடுத் தது.

1966 ஜனவரி மாதம் 8-ம் திகதி சிங்கள பௌத்தர்களின் துக்க தினம் என சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், அதனுடன் அணி சேர்ந்து நின்ற இடது சாரிக் கட்சிகளும் பிரகடனப்ப டுத்திக் கொண்டு, வேலை நிறுத் தம், கறுப்புக் கொடி பிடித்தல், விகாரமாதேவியின் சிலையின் முன்னால் பாராளுமன்ற உறுப் பினர்கள் சத்தியப்பிரமாணம் ஆகிய சடங்குகளை பௌத்த பிக்குகளின் ஆசியுடன் நடத்தி னர்.

இதில் இவர்கள் அறைகூவல் விடுத்த பொதுவேலை நிறுத்தத் திற்கு போதிய ஆதரவு கிடைக் கவில்லை. அதற்குத் காரணம். அக் காலகட்டத்தில் கொழும் புத் தொழிலாளர்கள் மத்தியில் பலம் பெற்ற தொழிற்சங்கமாக இருந்த இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், 'இது ஒரு இன வாத வேலைநிறுத்தம்' என்று பகிரங்கமாக கண்டித்ததேயா கும். இச்சங்கங்கள் நா. சண்மு கதாசன் தலைமையிலான கம் யூனிஸ்ட் கட்சியினுடையதாக இருந்தும், அக்கட்சி இவ்வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்பவர் களுடைய தீய இனவாத நோக் கத்தை அம்பலப்படுத்தியிருந்த தும் குறிப்பிடத்தக்கது.

1966-ம் ஆண்டு ஜன்வரி மாதம்

றத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

இந்த ஊர்வலத்துக்கு பொலிஸ் பெறப்படாத படியினால், ஊர் வலக்காரர்களை தொடர்ந்து செல்ல விடாமல் பொலிசார் தடுக்க, இருசாராருக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. இறுதியில் கலவரத்தை அடக்க பொலி சார் சுட்டதில் ஒரு பௌத்த



பிக்கு கொல்லப்பட்டுவிட்டார்.

ஓ! மசால வடையை டட்லி விழுங்கி விட்டார். செல்வநாய கத்தின் சொல்லைக் கேட்டுக் கொண்டு பௌத்த பிக்குவை டட்லி சுட்டுக் கொன்றுவிட் டார் என்றெல்லாம் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களும் - அவர்களது இட்துசாரிக் கூட் டாளிகளும் கூச்சல் போட்ட னர்.

பௌத்த பிக்கு கொல்லப் பட்டதையிட்டு மிகவும் பயந்து போன டட்லி சேனநாயக்கா, உடனடியாக அவசரகாலச் சட் டத்தை பிறப்பித்து விட்டு, செல்வநாயகத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் - கைவிடப்பட்டதாக அறிவித் தார்.

**- நக்கீரன்**

படிப்பகம்